# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## பொது வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகள்

**மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பாதுகாப்பு குறித்தான பொது வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகள் . … [வரைவு]**

**அறிமுகம்**

1998 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, உலகளாவிய ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் சமூகத்தின் அங்கங்களுக்கான உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டுள்ளது (மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பற்றிய பிரகடனம்).

இந்த பிரகடனத்தின் உறுப்புரை 1இன் படி: 'தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கும் செயல்படுத்துவதற்கும், அவற்றினைத் தனித்தனியாகவும், ஏனையவர்களுடன் ஒருங்கியிணைந்து, ஊக்குவிக்கவும், நடைமுறைப்படுத்துவதற்கும் அனைவருக்கும் உரிமைகள் உள்ளது' என்பதனை குறிப்பிடுகின்றது.

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் எனப்படுபவர்கள் தனித்தனியாக அல்லது ஏனையவர்களுடன் ஒருங்கியிணைந்தும், மனித உரிமைகளினை அமைதியான முறையில் மேலும் அவர்கள், மேம்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்பதற்கும் செயல்படும் நபர்கள் என வரையறுக்கப்படுகின்றனர். பெண்கள், குழந்தைகள், இன மற்றும் மத சிறுபான்மையினர்கள், இயலாமையுடையவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் LGBTIQ+ சமூகத்தினர் உள்ளிட்ட ஒதுக்கப்பட்ட மற்றும் நலிவான குழுக்களின் உரிமைகள் உட்பட அவர்களது மனித உரிமைகளுக்காக குரல் அளிக்கும் பிரதான முகவர்களாவர். அவர்கள் தனிப்பட்ட முறையில் அல்லது சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அரசு சாரா அமைப்புக்களின் (NGO) பகுதியாகவும் செயல்படுகின்றார்கள்.

சமூகங்களுக்கிடையில் உள்ள கசப்புணர்வுகள், இன மற்றும் மத குழுக்களுக்கிடையில் தோற்றுவிக்கப்பட்ட பகைமை காரணமாக பயங்கரமிக்க மோதல்கள் இடம்பெற்ற காலகட்டங்களை இலங்கை அனுபவித்துள்ளது. பயங்கரமிக்க மோதலின் போதும் அதற்குப் பின்னரும், நீதிக்கு புறம்பான படுகொலைகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல், சித்திரவதைகள், தன்னிச்சையாக கைது செய்யப்படுதல், காவலில் தடுத்து வைக்கப்பட்டிருத்தல் மற்றும் இடம்பெயர்தல் உள்ளிட்ட கடுமையான மனித உரிமை மீறல்களை இலங்கை எதிர்கொண்டுள்ளது. இத்தகைய மீறல்களின் விளைவுகள் இன்றும் உணரப்படுகின்றன. இதற்கிடையில், வெவ்வேறு பால் மற்றும் பால் நிலை காரணமாக சிறுபான்மையினராக உள்ளோர் பாகுபாடு மற்றும் துன்புறுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டச் சீர்திருத்தம் சமீபத்தில் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இது போல், இயலாமையுடையவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டம் நீண்ட காலமாக அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையும் பொருளாதார நெருக்கடியினை சந்தித்துள்ளது. இது ஏழை மக்களின் சமூக பொருளாதார உரிமைகள் உட்பட ஏனைய விடயங்களில் உரிமைகள்

மீறுப்படுவதற்கான வழியினை அமைக்கிறது. இந்த மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மீறல்களை ஆவணப்படுத்துதல், உரிமைகளை மீறும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை சவாலிற்குட்படுத்துதல் மற்றும் சீர்திருத்தங்களை ஆதரித்து குரல் எழுப்பல் ஆகியவற்றில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் ஆற்றிய முக்கிய பங்கு அங்கீகரிக்கப்படுதல் அவசியமாகும்.

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் தங்கள் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்படுதல், காவலில் தடுத்து வைக்கப்பட்டிருத்தல் மற்றும் அவர்களின் செயற்பாட்டின் காரணமாக தமக்கு எதிரான வழக்குத் தொடரப்படும் அபாயத்தை எதிர்கொள்ளல் போன்றவை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுகின்றார்கள் . அவர்கள் அடிக்கடி வன்முறை, அச்சுறுத்தல்கள், எதிர்தாக்குதல், மிரட்டல்கள், நடைமுறை அல்லது சட்டத்திற்குப் புறம்பான பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் ஏனைய தன்னிச்சையான நடவடிக்கைகளை எதிர்கொள்கின்றனர். மேலும் அவர்கள் ஊடகங்களில் அடிக்கடி களங்கப்படுத்தப்படுகின்றார்கள்.

மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள் தொடர்பாக அரசிற்கு குறிப்பிட்ட கடமைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. முதலாவதாக, மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து, இந்த உரிமைகளை மீறுவதையோ அல்லது தேவையில்லாமல் கட்டுப்படுத்துவதையோ தவிர்த்தல் அவசியமாகும். இரண்டாவதாக, மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளானது தனியார் நிறுவனங்களால் மீறப்படாமல் அதனை பாதுகாக்கும் கடமை காணப்படுகின்றது. மீறல்கள் நிகழும்போது, மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு வினைதிறனுள்ள தீர்வுகளை வழங்க வேண்டிய கடமையானது அரசிற்கு உள்ளது.

இந்த மேற்குறிப்பிட்ட சூழமையில், மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள் இலங்கையில் நியாயமான வகையில் மதிக்கப்படுவதனையும் பாதுகாக்கப்படுவதனையும் உறுதி செய்வதற்காக சில பொதுவான வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளை உருவாக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

## 1. பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை

1.1 மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் சட்டபூர்வமான தன்மையினை அரசு தீவிரமாக ஊக்குவித்தல் வேண்டும். சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தங்களது செயல்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான அனைத்து சூழ்நிலைகளையும் அரசு உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். இது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளில், மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும், அவர்களின் பணியின் முக்கியத்துவத்தையும் பகிரங்கமாக ஒப்புக்கொள்தல், தனிப்பட்ட மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், மனித உரிமைகள் விவகாரங்களில் மனித உரிமைகள்

பாதுகாவலர்களை ஆக்கப்பூர்வமாக ஈடுபடுத்துதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக முன்மொழியப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து மனித உரிமைகள் பாதுகாவலர்களுடன் ஆலோசனை செய்தல் ஆகியவை இதனுள் அடங்கும்.

1.2 பெண்கள், குழந்தைகள், இன மற்றும் மத சிறுபான்மையினர்கள், இயலாமையுடையவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் LGBTIQ + சமூகத்தினர் உள்ளிட்ட ஓரங்கட்டப்பட்ட மற்றும் நலிவான குழுக்களின் குறிப்பிட்ட தேவைகளினை அரசு கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் சட்டப்பூர்வத்தை மேம்படுத்துவதற்காக சிறப்பான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, மனித உரிமைகள் பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் வன்முறை, அச்சுறுத்தல்கள், எதிர்தாக்குதல், மிரட்டல், நடைமுறை அல்லது சட்டத்திற்குப் புறம்பான பாகுபாடு, துன்புறுத்தல் அல்லது ஏனைய தன்னிச்சையான நடவடிக்கைகள் ஆகியவை மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பாலினம், பாலின அடையாளத்தை இலக்காகக் கொண்டிருக்கலாம். மனித உரிமைகள் பாதுகாவலர்களில் பெண்கள் தற்போது பாலினம் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இதில் பௌதிக அல்லது பாலியல் வன்முறை அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் மற்றும் அவமானப்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கும். இலத்திரனியல் தளங்களிலும் இத்தகைய தொல்லைகள் இடம்பெறலாம். மேலும், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தங்களது இன அல்லது மத அடையாளத்தின் காரணமாகவும் அதிகளவிலான அபாயங்களை எதிர்கொள்ள நேரிடும்.

1.3 அரச அதிகார அமைப்புகள் வன்முறை, அச்சுறுத்தல்கள், மிரட்டல், எதிர்தாக்குதல் அல்லது மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு அல்லது அவர்களது குடும்பங்களிற்கு எதிராக நடைமுறையில் பாதகமான பாகுபாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் வேண்டும். மனித உரிமைகள் பாதுகாவலர்களையோ அவர்களது குடும்பத்தினரையோ நியாயமற்ற அல்லது தேவையற்ற பௌதீக அல்லது இலத்திரனியல் கண்காணிப்புகளுக்கு உட்படுத்துவதையோ அல்லது எந்தவொரு தன்னிச்சையான நடவடிக்கைகள் அல்லது துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுவதையும் தவிர்த்தல் வேண்டும். மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பயன்படுத்தும் வளாகங்கள் அல்லது வாகனங்களைத் தேடுதல், அல்லது மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பயன்படுத்தும் உபகரணங்களை பறிமுதல் செய்தல் போன்றனவும் இவற்றுள் அடங்கும். அரச அதிகாரிகளும் அவதூறு பிரச்சாரங்களில் ஈடுபடுவதனைத் தவிர்த்து கொள்தல் வேண்டும், எதிர்மறையான சித்தரிப்புகள் அல்லது மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் அவர்களின் சட்டப்பூர்வமான செயல்பாடுகளை களங்கப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுவதனையும் தவிர்த்துக் கொள்தல் வேண்டும்.

1.4 மனித உரிமைகள் பாதுகாவலர்களின் சட்டப்பூர்வ நடவடிக்கைகளின் விளைவாக எந்தவொரு வன்முறை, அச்சுறுத்தல்கள், எதிர்தாக்குதல், மிரட்டல், நடைமுறை அல்லது சட்டத்திற்குப் புறம்பான எந்தவொரு தனிப்பட்ட நபரின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கும் எதிராக மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் அவரது குடும்பத்தினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்தல் வேண்டும். தனியார் நிறுவனங்களின் மேற்குறிப்பிட்ட செயல்களை அரச அதிகாரிகள் பகிரங்கமாக கண்டித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய நபர்கள் வகை சொல்வதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

1.5 மனித உரிமைகள் பாதுகாவலர்களின் சட்டப்பூர்வமான செயல்பாடுகளை குற்றமாகக் கருதுதல் அல்லது குற்றமாகக் கருதுவதற்கான விளைவுகளினை ஏற்படுத்தும் சட்டங்கள் அல்லது கொள்கைகள் அல்லது நடைமுறைகளை நிறுவுவதில் இருந்து அரசு விலகி இருத்தல் வேண்டும். அரச அதிகார அமைப்புகள் மனித உரிமைகள் பாதுகாவலர்களை தேவையற்ற சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு உட்படுத்தக்கூடாது, அந்த வகையில் சட்டப்பூர்வ அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல், தன்னிச்சையாகக் கைது செய்தல் மற்றும் காவலில் தடுத்து வைத்திருத்தல், அத்துடன் அவர்களின் சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கான ஏனைய தடைகள் ஆகியவை இதில் அடங்கும். மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டால், நியாயமான விசாரணைக்கான உரிமையின் அனைத்து கூறுகளும், அதாவது சுயாதீனமான நீதிமன்றில் சுயமாக குற்றஞ்சாட்டப்படாத உரிமை, சட்ட ஆலோசகரை அணுகுவதற்கான உரிமைகள் முழுமையானதும் நியாயமானதுமான நீதிமன்ற விசாரணைக்கான உரிமை (அவற்றுள் மட்டும் வரையறுக்கப்படவில்லை) ஆகியவற்றை அரசு உறுதி செய்தல் வேண்டும்.

1.6 அரசியலமைப்பின் 15 வது உறுப்புரையின் மூலம் கட்டுப்பாடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளதைத் தவிர, இலங்கை அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான எந்தவொரு உரிமைகளுக்கும் எந்தவொரு கட்டுப்பாடுகளை விதிப்பதனையும் அரசு தவிர்த்தல் வேண்டும். அத்தகைய கட்டுப்பாடு பாராளுமன்றச் சட்டம் அல்லது 1947 ஆம் ஆண்டின் 25 ஆவது இலக்க பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் ஒழுங்குமுறைகளின் மூலம் இருத்தல் வேண்டும். வேறு எந்த விதிமுறைகள் அல்லது நிர்வாக சுற்றறிக்கைகள் மூலமும் எந்தவொரு கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியாது. மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள் மீது கட்டுப்பாடு விதிக்கும் போது, அரசானது கட்டுப்பாட்டின் அவசியத்தை நிரூபித்தல் வேண்டும் மற்றும் அரசியலமைப்பின் 15 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள நியாயமான நோக்கங்களைத் தொடர்வதற்காக விகிதாசாரமாக மட்டுமே முடிவுகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

1.7 மனித உரிமைகள் பாதுகாவலர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட புதிய சட்டங்கள், கொள்கைகள் அல்லது நடைமுறைகள் குறித்து அரசு மனித உரிமைகள் பாதுகாவலர்களை அர்த்தமுள்ள முறையில் கலந்து ஆலோசித்தல் வேண்டும்.

**2. சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை**

2.1 அரசியலமைப்பின் 11 மற்றும் 13(1) உறுப்புரைகளினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு போன்ற மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான உரிமைகளினை அரசு மதித்து பாதுகாத்தல் வேண்டும்.

2.2 மனித உரிமைகள் பாதுகாவலரினரின் இத்தகைய உரிமைகளில் சட்டத்திற்குப் புறம்பான கொலை, சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைகள், பலவந்தமாக காணாமல் போதல், மற்றும் தன்னிச்சையான கைது செய்தல் மற்றும் அவர்களின் சட்டப்பூர்வ நடவடிக்கைகளின் காரணமாக காவலில் தடுத்து வைக்கப்பட்டிருத்தல் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கான உரிமைகளும் இதில் அடங்கும்.

**3. சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமை**

3.1 அரசியலமைப்பின் 12(1) ஆவது உறுப்புரையின் படி உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள சமத்துவத்திற்கான அதாவது மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான உரிமை மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு போன்றவற்றை அரசு மதித்தல் வேண்டும்.

3.2 மனித உரிமைகள் பாதுகாவலரினரை அவர்களின் இனம், மதம், மொழி, சாதி, பால், பால் நிலை, பாலின தோற்றுநிலை, அரசியல் கருத்து, பிறப்பிடம், அரசியல் நோக்கம் ஆகியன அரசியலமைப்பின் 12(2) சரத்தின் மூலம் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ உத்தரவாதம் அளிக்கும் அடிப்படையில் அரசு பாகுபாடு காட்டக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை**

4.1 மனித உரிமைகளை முன்னேற்றுதல் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்திற்காக அரசியலமைப்பின் 14(1)(அ) உறுப்புரையின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம், தேசிய மற்றும் சர்வதேச அளவில் தனியாகவும் மற்றும் ஏனையோருடனும் ஒருங்கிணைந்து, மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமையினை அரசு மதிப்பளித்து அவற்றினை பாதுகாத்தல் வேண்டும். சமூக ஊடக தளங்கள் உட்பட எந்த ஊடகத்தின் மூலமாகவும் அத்தகைய உரிமைகளினைப் பயன்படுத்தப்படலாம்.

4.2 அத்தகைய உரிமைகளில் பின்வருவன அடங்கும்:

(அ) அனைத்து மனித உரிமைகளையும் சட்டம் மற்றும் நடைமுறையில் கடைப்பிடிப்பதற்கும், மற்றும் புதிய மனித உரிமைகள் தொடர்பான யோசனைகள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதற்கும் மற்றும் விவாதிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும், அவற்றினை உருவாக்குவதற்கும் மற்றும் கருத்துக்களை நடத்துவதற்குமான சுதந்திரம்;

(ஆ) அனைத்து மனித உரிமைகள் பற்றிய கருத்துக்கள், தகவல் மற்றும் அறிவை சுதந்திரமாக வெளியிடுவதற்கும், வழங்குவதற்கு அல்லது மற்றவர்களுக்கு பரப்புவதற்கான சுதந்திரம் மற்றும் புதிய மனித உரிமைகள், கருத்துக்கள் மற்றும் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதனையும் ஆதரித்தல்; மற்றும்

(இ) ஐக்கிய நாடுகளின் சாசன அடிப்படையிலான மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான மனித உரிமைகளின் பொறிமுறைகள் உட்பட, அரசு சாரா அல்லது அரசுகளுக்கிடையேயான அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் வழிமுறைகளுடன் தொடர்புகொள்வதற்கான சுதந்திரம்.

4.3 அச்சு, இலத்திரனியல் அல்லது சமூக ஊடகங்களை தணிக்கை செய்வதனையோ அல்லது தேவையில்லாமல் ஒழுங்குபடுத்துவதையோ அரசு தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் அத்தகைய ஊடகங்களில் தங்கியிருப்பதனாலேயாகும்.

4.4 தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில், மனித உரிமைகள் எவ்வாறு உள்ளன என்பது பற்றிய தகவல்களை அணுகுதல் உட்பட, அனைத்து மனித உரிமைகள் பற்றிய தகவல்களைத் தேடுவதற்கும், பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் வைத்திருப்பதற்கும் தனித்தனியாகவும் மற்றவர்களுடன் இணைந்தும் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமையை அரசு மதித்து அவற்றினை பாதுகாத்தல் வேண்டும். உள்நாட்டில் சட்டமியற்றுதல், நீதித்துறை அல்லது நிர்வாக அமைப்புகளில் செயல்படுத்துதல் அந்த உரிமைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு ஏற்றதாக அமையப் பெற்றிருத்தல்.

**5. ஒன்றுகூடலுக்கான உரிமை**

5.1 அரசியலமைப்பின் 14(1)(ஆ) உறுப்புரையினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளபடி, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில், தனித்தனியாகவும் மற்றவர்களுடன் இணைந்தும் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளினை அரசு மதித்து பாதுகாத்தல் வேண்டும்.

5.2 அமைதியான முறையில் செயற்படுத்துதல் மற்றும் செயல்கள் அல்லது தடுத்தலின் போது அவற்றின் வினைதிறனைக் கருத்தில் கொண்டு தேசிய சட்டத்தின் கீழாக மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள்

பாதுகாக்கப்படுதல் வேண்டும். அரசின் நடாத்துகைகள் காரணமாக, எதிர்ப்பு தெரிவித்தல், அதனை எதிர்த்தல், தவிர்த்தல் ஆகியவற்றினால் மனித உரிமைகள் மீறப்படுகின்றது. தனியார் நிறுவனங்களினால் ஏற்படுத்தப்படும் மனித உரிமை மீறல்களும் இதனுள் அடங்கும்.

**6. ஒருங்குசேருவதற்கான சுதந்திரம்**

6.1 உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்திற்காக அரசு சாரா அமைப்புக்கள், சங்கங்கள் அல்லது குழுக்களை உருவாக்குவதற்கும், அதில் சேருவதற்கும், பங்கேற்பதற்கும், தனித்தனியாகவும் ஏனையவர்களுடன் ஒருங்கிணைந்து, மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமையை அரசு மதித்து பாதுகாத்தல் வேண்டும். இதனை அரசியலமைப்பின் 14(1)(இ) உறுப்புரையில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

6.2 ஒருங்குசேருவதற்கான சுதந்திரத்திற்கான அத்தகைய உரிமையானது, அமைதியான வழிகளில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் வெளிப்படையான நோக்கத்திற்காக வளங்களைக் கோருவதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்குமான சுதந்திரத்தினையும் உள்ளடக்கியுள்ளது.

6.3 மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அரசு சாரா அமைப்புகள், சங்கங்கள் அல்லது குழுக்களின் உருவாக்கம், செயல்பாடு மற்றும் நிதி மேலாண்மை ஆகியவற்றில் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் மீது தேவையற்ற நிர்வாக அல்லது ஒழுங்குமுறைச் சுமைகளை விதிக்கும் சட்டங்கள் அல்லது கொள்கைகள் அல்லது நடைமுறைகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

**7. தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம்**

7.1 அரசியலமைப்பின் 14(1)(ஏ) உறுப்புரையின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரம், மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்திற்காக, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில், தனித்தனியாகவும், மற்றவர்களுடன் இணைந்தும், மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான உரிமைகளினை அரசு மதித்து பாதுகாத்தல் வேண்டும்.

7.2 அத்தகைய உரிமையானது இலங்கையின் முழுப் பகுதியிலும் சுதந்திரமாக தடையின்றி நடமாடும் இயலுமை மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்திற்காக வெளிநாடுகளுக்குச் செல்வது போன்றனவும் இவற்றுள் அடங்கும்.

7.3 தகவல்களைச் சேகரிப்பதற்கும், மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கும், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கும், மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இலங்கையின் எந்தப் பகுதிக்குள் நுழைவதற்கும் அல்லது இலங்கையை விட்டு வெளியேறுவதற்கும், மேலும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு முன் அனுமதி பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகளினைச் சுமத்துவதனை அரச அதிகார அமைப்புக்கள் தவிர்த்தல் வேண்டும்.

**8. ஒரு பயனுள்ள தீர்வுக்கான உரிமை**

8.1 அவர்களின் உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறப்படும் போது, வினைதிறனான தீர்வுகளிலிருந்து பயனடைவதற்கும், தனித்தனியாகவும், ஏனையவர்களுடன் ஒருங்கிணைந்தும், மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமையை அரசு மதித்து பாதுகாத்தல் வேண்டும். அதேபோன்று, தண்டனையிலிருந்து காவல் கலாச்சாரம் இல்லை என்பதை அரசு உறுதி செய்வதுடன் மேலும் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளை மீறுவதற்கும், அவ்வாறு உரிமைகளை மீறுபவர்களுக்கு எதிராக பொருத்தமான சட்ட பிரயோகத்தை உறுதிப்படுத்த வேண்டியதும் அரசின் கடமையாகும்.

8.2 உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறப்படும் அனைத்து மனித உரிமைகள் பாதுகாவலர்களினருக்கும், நேரிலோ அல்லது சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தின் மூலமாகவோ, சட்ட அமுலாக்க அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்வதற்கான உரிமைக்கு அரசு உத்தரவாதம் அளித்தல் வேண்டும். மேலும் அத்தகைய அதிகார அமைப்புக்கள் முறைப்பாட்டினை பதிவு செய்யவோ அல்லது முன்னெடுத்துச் செல்லவொ மறுக்கக்கூடாது. அத்தகைய ஒவ்வொரு முறைபாடும் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு சுயாதீனமான, பாரபட்சமற்ற மற்றும் தகுதிவாய்ந்த நீதித்துறை அல்லது ஏனைய அதிகார அமைப்புக்களின் முன் பொது விசாரணையில் உடனடியாக மதிப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய அதிகார அமைப்புக்களிடமிருந்து சட்டத்தின்படி ஒரு முடிவைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ள போது, கொடுக்கப்பட்டுள்ள இறுதி முடிவு மற்றும் தீர்ப்புக்களை அமுலாக்குவது, போன்ற அனைத்து செயற்பாடுகளும் தேவையற்ற தாமதமின்றி நடைபெறுதல் வேண்டும்.

8.3 மனித உரிமைகள் பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள், அச்சுறுத்தல்கள், எதிர்தாக்குதல், மிரட்டல்கள், நடைமுறை அல்லது சட்டத்திற்குப் புறம்பான பாகுபாடு, துன்புறுத்தல் அல்லது எந்தவொரு தனியார் நபரினதும் தன்னிச்சையான செயல்களின் போது முறைபாடு செய்வதற்கு மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு அரசு வினைதிறன் மற்றும் போதுமான பாதுகாப்பினை வழங்குதல் வேண்டும்.

8.4

(அ) மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக தனிப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசாங்க அமைப்புகளின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து மனு அல்லது பிற பொருத்தமான வழிமுறைகள் மூலம் தகுதிவாய்ந்த நீதித்துறை, நிர்வாக அல்லது சட்டவாக்க அதிகார அமைப்புக்களிடம் முறைபாடு செய்வதற்கும்;

(ஆ) பொது விசாரணைகள், நடைமுறைகள் மற்றும் வழக்குகளை நடாத்துவதற்கும் அதில் கலந்துகொள்வதன் மூலம், தேசிய சட்டம் மற்றும் பொருந்தக்கூடிய சர்வதேச கடப்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு இணங்குவது குறித்து கருத்துக்களினை உருவாக்குவதோடு;

(இ) மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தொழில்ரீதியாகத் தகுதியான சட்ட உதவி அல்லது ஏனைய தொடர்புடைய ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்குதல்.

அனைத்து மனித உரிமைகள் பாதுகாவலரினருக்கும் தனித்தனியாகவும் மற்றவர்களுடன் இணைந்தும் அரசு உத்தரவாதம் அளித்தல் வேண்டும்:

8.5 மனித உரிமைகள் தொடர்பான விடயங்களின் முறைப்பாடுகளை கருத்தில் கொள்வதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் பொது அல்லது விஷேடமான சர்வதேச அமைப்புகளை அணுகுவதற்கும், தொடர்புகொள்வதற்கும், தனித்தனியாகவும் ஏனையவர்களுடன் ஒருங்கிணைந்தும் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளினை அரசு மதித்து பாதுகாத்தல் வேண்டும்.

**பரிந்துரைகள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நோக்கத்தில், பின்வரும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்திற்கு ஊக்குவிக்கப்படுகின்றது:

1. **மனித உரிமைகள் பாதுகாவலர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் கண்காணிக்கப்படுவதனையும், மதிப்பீடு செய்யப்படுவதனையும் உறுதி செய்வதற்காக அரசாங்கத்திற்குள் ஒரு மையப் புள்ளியை நிறுவுதல் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பல்வேறு அரச நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல்.**

2. **தொடர்புடைய நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து, ஆபத்தில் உள்ள மனித உரிமைகள் பாதுகாவலர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பொருத்தமான பாலின-உணர்திறன் பாதுகாப்புக் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பொறிமுறைகளை உருவாக்குதல். 2023 ஆம் ஆண்டின் 10 ஆவது இலக்கச் சட்டத்தின் கீழ், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் அப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பௌதிக பாதுகாப்பு, தற்காலிக இடமாற்றம் மற்றும் ஏனைய பாதுகாப்பு**

நடவடிக்கைகள் மற்றும் ஆதரவு சேவைகளை வழங்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

3. சம்பந்தப்பட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து, சட்ட அமுலாக்க அதிகாரிகள், பாதுகாப்புப் படைகள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதில் கட்டுப்பாட்டாளர்கள் உட்பட அரச அதிகாரிகளுக்கான விரிவான பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டத்தை உருவாக்குதல். திட்டத்தில் நடைமுறை விளக்கப்படங்களுடன் பயிற்சி கையேடு இடம்பெறலாம். மேலும் இது சட்ட அமுலாக்க அதிகாரிகள், பாதுகாப்பு படையினரை பயிற்றுவிப்பதற்காக பயன்படுத்தப்படும் நடைமுறையில் காணப்படுகின்ற பாடவிதானத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

4. அனைத்து சட்டங்கள் மற்றும் கொள்கைகள் உட்பட அவற்றுடன் தொடர்புடைய நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து மதிப்பாய்வு செய்யவும். அவற்றுள் கீழ் வருவன உள்ளடங்குகின்றன. 1865 ஆம் ஆண்டின் 16 ஆவது இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டம், 1883 ஆம் ஆண்டின் 2 ஆவது இலக்க தண்டனை கோவைச் சட்டம், 1897 ஆம் ஆண்டின் 3 ஆவது இலக்க பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், 1947 ஆம் ஆண்டின் 25 ஆவது இலக்க தனிமைப்படுத்துதல் மற்றும் நோய்களைத் தடுக்கும் கட்டளைச் சட்டம், 1947 ஆம் ஆண்டின் 25 ஆவது இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 48 ஆவது இலக்க கணினிக் குற்றச் சட்டம், மற்றும் 2007 ஆம் ஆண்டின் 56 ஆவது இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச கட்டுறுக்கை மனித உரிமைகள் பாதுகாவலர்களின் சட்டபூர்வமான செயல்பாடுகளைத் தடுக்கும் வகையில் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தெளிவற்ற மற்றும் சந்தேகமான வரையறைகளைக் கொண்ட சட்ட விதிகள், அவை தங்களுக்கு பரந்த விளக்கத்திற்குக் கைகொடுக்கும் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்காக வழக்குத் தொடரவும் அவை துஷ்பிரயோகம் செய்யப்படலாம்.

5. 1980 ஆம் ஆண்டின் 31 ஆவது இலக்க தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டமானது, அரசு சாரா அமைப்புகளை பதிவு செய்யும் நோக்கத்திற்காகவும், நிர்வாக மற்றும் நிதி ஒழுங்குமுறைக்காகவும் பயன்படுத்துவதற்காகவும் அனைத்து தற்போதைய சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தொடர்புடைய நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து மதிப்பாய்வு செய்தல் அவசியமாகும். பதிவு செய்தலானது தெளிவான, எளிமையான மற்றும் பாரபட்சமற்ற அடிப்படையில் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தவும். நிர்வாக மற்றும் நிதி அறிக்கை தேவைகள் நியாயமாகவும் மற்றும் சட்டத்தில் தெளிவாக வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துதல். மேலும் அரசு சாரா அமைப்புகளின் நிதிப் பதிவுகளின்

எந்தவொரு ஆய்வும் தெளிவான சட்ட அடிப்படையிலும் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் மட்டுமே மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. ஆபத்தில் உள்ள மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதற்கும், அவசரகால நிவாரணம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான ஏனைய ஆதரவுச் சேவைகளுக்கும் வழக்கமான வரவு செலவுத் திட்டத்தில் போதுமான நிதியினை ஒதுக்குதல்.